286—

வேளாண்மைக் கல்லூரி

***28735—திரு. ஒய். பிரகாஷ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதியில் புதிய வேளாண்மைக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்றத் தொகுதியில் ஒரு வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்று கடந்த ஆண்டு இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தேன். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற அனைத்து ஊராட்சிகளும் விவசாயத்தை நம்பியே இருக்கின்றன. அங்கு காய்கறிகள் மற்றும் மலர்கள் அதிகமாக விளைவதாலும், கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு மலர்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்ற காரணத்தினாலும், என்னுடைய தொகுதியில் ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

2018 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 14 உறுப்புக் கல்லூரிகளும் 27 இணைப்புக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. அவற்றில் முதுநிலை பட்டப் படிப்புடன், 13 இளநிலை பட்டப் படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகளில் தேவையான அளவு இடங்கள் ஒதுக்கப்பட்டு, அனைத்து மாவட்ட மாணவர்களும் படித்து வருகின்றனர். தமிழ்நாட்டு மாணவர்கள் மேற்கண்ட கல்லூரிகளில் சேர்ந்து படிக்க ஏதுவாக உள்ளது. தளி தொகுதிக்கு அருகில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருவண்ணாமலை அருகில் வாழவச்சனூரில் செயல்பட்டு வருகிறது. தளிக்கு அருகில் ஓசூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரியான அதியமான் வேளாண்மைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. தளி தொகுதி மாணவர்கள் இக்கல்லூரிகளைத் தேர்வு செய்து பயன்பெறலாம். மேலும், வேளாண்மை சார்ந்த சந்தேகங்களுக்கு மேற்கூறிய கல்லூரிகளிலும், பையூரில் செயல்பட்டுவரும் மண்டல ஆராய்ச்சி நிலையம் மற்றும் தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் செயல்பட்டுவரும் வேளாண்மை அறிவியல் நிலையங்களைத் தொடர்புகொண்டு விவசாயிகள் தங்கள் பயிர் சார்ந்த சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை தாலுகா, தளி வட்டாரத்தில், கூட்டூர் என்னும் கிராமத்தில் 55 ஏக்கரில் தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 10 ஏக்கரில் இந்திய–இஸ்ரேல் வேளாண்மைத் திட்டத்தின்கீழ் கொய்மலர் மருத்துவ மையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 23,000 சதுரடியில் மாணவர் விடுதி உள்ளது. இதில் 2 வகுப்பறைகள் நவீன வசதிகளுடன் அமைந்துள்ளன. இவ்வசதிகளைக் கொண்டு 2018–2019 ஆம் ஆண்டு முதல் தோட்டக்கலை அறிவியலில் இரண்டு ஆண்டுகால பட்டயப் படிப்பு ஆண்டுதோறும் 50 மாணவர்களுக்கு வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்

திட்டமிட்டு, ஆணைகள் வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 2018–2019 ஆம் ஆண்டில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மையத்தின்மூலம் தளி வட்டார மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மாணவர்கள் மற்றும் விவசாயிகள், விவசாயம் சார்ந்த கல்வி மற்றும் ஆலோசனை பெற்று பயன்பெறலாம். மேலும், புதிதாக வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 110 ஏக்கர் நிலம் தேவைப்படும். அதிகப்படியான ஒவ்வொரு பட்டப் படிப்பிற்கும் 110 ஏக்கர் நிலம் கூடுதலாகத் தேவை. வேளாண்மைக் கல்லூரி நிறுவ உத்தேசித்துள்ள இடத்தின் மதிப்பினைப் பொறுத்து நிதித் தேவை மாறுபடும். மேலும் ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் அமைச்சுப் பணிகளுக்குத் தேவையான மனித ஆற்றல், கல்லூரி மற்றும் பண்ணையின் அளவினைப் பொறுத்து மாறுபடும். எனவே, தளி தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.

திரு. ஒய். பிரகாஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, எங்களுடைய மாவட்டத்தில் விவசாய தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் ஒன்றை அறிவித்தார்கள். அதற்குத் தேவையான நிலத்தையும் கையகப்படுத்தி முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆட்சி வந்தபிறகு அத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது. ஆகவே அதனையும் இந்த அரசு கவனத்தில்கொள்ள வேண்டும். அதேபோல சூடசந்திரம் ஊராட்சியில் இஸ்ரேல் நிறுவனத்துடன் இணைந்து செயல்படக்கூடிய அந்த ஆராய்ச்சி மையம், தொகுதிக்குட்பட்ட விவசாயிகளுக்கோ அல்லது மாவட்டத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கோ தேவைப்படாமல் முழுக்க முழுக்க இஸ்ரேல் நாட்டினுடைய control–ல்தான் இருக்கிறது. ஆகவே, இந்த அரசு அதன்மீது கவனம் செலுத்தி இந்த மாவட்ட, தொகுதி மக்களின் நலனைக் கருதி ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைத்துத் தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2018 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல தோட்டக்கலை அறிவியலில் இரண்டு ஆண்டுகால பட்டயப் படிப்பு 50 மாணவர்களோடு தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்காக 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 287, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

287—

புதிய மாவட்டம்

***4231—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வருவாய்த் துறையின் அரசாணை (நிலை) எண் 279–ன்படி ஒரு புதிய மாவட்டம் உருவாக்க வேண்டுமென்றால், அதற்கென்று ஒரு அளவுகோல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையில் அந்த அளவுகோலின்படி பரப்பளவு, கிராமங்களின் எண்ணிக்கை, கோட்டங்களின்